RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt25116

OPEN ACCESS

# திருமுருகாற்றுப் படையில் ஆறுமுகத்தோன்

**செ. உமாதேவி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, வே.வ.வன்னியப் பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர் 626001, தமிழ்நாடு, இந்தியா

# God Mugran in Tirumurukatruppatai

**S. Uma Devi [a, *]**

[a] Department of Tamil, V.V.Vanniaperumal College for Women, Virudhunagar-626001, Tamil Nadu, India

* Corresponding Author: Umadevis@vvvcollege.org

Received: 20-11-2024
Revised: 06-01-2025
Accepted: 17-01-2025
Published: 29-01-2025

Check for updates

**ABSTRACT**

Temples are the soul of India. Temples are the pride of India at the world level. The deities, festivals, high philosophies, arts and cultural monuments that are dependent on the temples make the world aware of the greatness of our country. The divine power resides in the temples and protects the devotees who come in search of Him and grant them what they desire. The devotees who realized this divine power have composed devotional hymns on their divine experience. These verses are full of devotional feeling, philosophies and divine experiences. Nakkeerar has sung about his divine experience towards Lord Muruga. This article has tried to explain the activities of the six faces of Lord Arumuga in a review.

**Keywords:** Temples, Murugan, Mayon, Sangam literature, Pride of India

## முன்னுரை

பாரத நாட்டின் ஆன்மா திருக்கோயில்களாகும். ஆலயம் எனப்படும் திருக்கோயில்கள் பாரத நாட்டினை உலக அளவில் உயர்த்திப் பெருமை படுத்துகின்றன. திருக்கோயில்களைச் சார்ந்து இருக்கின்ற தெய்வங்கள், விழாக்கள், மனிதப் பிறவியை மாண்புறச் செய்யும் உயர்ந்த தத்துவங்கள், கலைகள், பண்பாட்டுச் சின்னங்கள் அனைத்தும் நம் நாட்டின் மகத்துவத்தை உலகறியச் செய்து பெருமைப் படுத்துகின்றன. திருக்கோயில்களில் உறைந்திருக்கும் தெய்வ சக்தி தன்னைத் தேடியும் நாடியும் வரும் அடியவர்களுக்கு அவர்கள் விரும்புவதை வழங்கிக் காக்கின்றது. இத்தெய்வ சக்தியை உணர்ந்த அடியவர்கள் தங்கள் தெய்வ அனுபவத்தைப் பக்திப் பாக்களாக இயற்றியுள்ளனர். இப்பாக்களில் பக்தி உணர்வும், தத்துவங்களும், இறை அனுபவங்களும் நிறைந்துள்ளன. நக்கீரர் முருகப்பெருமான் மீது கொண்ட இறை அனுபவத்தைத் திருமுருகாற்றுப்படையாகப் பாடியுள்ளார். அதில் ஆறுமுகப்பெருமானின் ஆறு திருமுகங்களுக்கான செயல்பாடுகளை மீள் பார்வையில் இக்கட்டுரை விளக்க முற்பட்டுள்ளது.

## திருமுருகாற்றுப் படையும் நக்கீரரும்

நக்கீரர் தமிழ்ச் சங்கத்தின் தலைமைப் புலவராக இருக்கும் மிகப்பெரிய தகுதியை உறுதி செய்து அதற்கு உயிரூட்டியவர் சிவபெருமான். தமிழ்ப் பற்றை இறைப் பற்றாகக் கொண்டவர். சிவனையும், முருகனையும் வழிபட்ட அகத்தியர், ஔவையார், பொய்யாமொழிப் புலவர், அருணகிரியார் போன்ற பத்துப் புலவர்களில் ஒருவர். தம்மை சிறை வீடு செய்யப் பாடி அருளிய திருமுருகாற்றுப்படையில் முருகனின் ஆறுபடை வீட்டைச் சிறப்பித்ததோடு ஆறு முகங்களையும் அதன் பெருமைகளையும்

எடுத்துரைத்துள்ளார். மேலும் முருகப் பெருமான் விண்டுரைக்க முடியாத தன்மையுடையவன் என்றும் முருகனுடைய திருவடியே இக பர சுகத்தை வழங்கும் என்றும் அனைத்து மக்களும் வழிபட்டு உய்யும் வகையையும் திருமுருகாற்றுப்படையில் எடுத்துரைத்துள்ளார்.

## அடியவர் முருகனாக ஆற்றுப்படுத்துதல்

முருகப்பெருமான் சிவத்தன்மை முழுமையும் பெற்று ஞானமும் கை வரப் பெற்றவர். மகன் சான்றோனாகுதல், அறிவிற் சிறந்தவராகுதல் என்பதை ஒரு தந்தையானவர் தோல்வியாகக் கருத மாட்டார். தன்னைவிட உயர்ந்தவர் என்றும் ஞானத்தைப் பெற்றவர் என்றும் அறிவிப்பதற்காகவே சிவபெருமான் தாமே முருகனிடம் உபதேசம் பெற்றவராகிறார். தன்னைவிட வீரத்திலும் சிறந்தவராக இருந்தால் மட்டுமே சூரபத்மன், தாரகாசுரன், சிங்க மகன் மூவரையும் அழிக்க முடியும் என்று எண்ணி வீரராகவும், சூரராகவும், படைக்கப்பட்டவர். அவர் வேண்டுவோருக்கு வேண்டுவதை அருள்பவர். இப்பிறவிக்குத் தேவையானவற்றை அருள்வதோடு மறுமைக்கு வீடுபேறு வேண்டியோருக்கு வீடு பேற்றை அருள்பவர். இவ்வுலகத்திற்குத் தேவையான அனைத்தையும் யாவரும் திருக்கோவில்களுக்குச் சென்று இறைவனிடம் கேட்டுப் பெறலாம். ஆனால் வீடுபேற்றைப் பெறுவோர் திருக்கோயில்களுக்குச் செல்வதை விடத் தம்மை அதற்குத் தகுதிப்படுத்திக் கொள்வது மிக முக்கியம். தம்மை தகுதிப்படுத்திக் கொண்டவருக்காகவே முருகனிடம் அருள் பெற்ற அடியார் வீடுபேறு என்ற அருளைப் பெறக் காத்திருப்பவருக்கு முருகன் வீற்றிருக்கும் அறுபடை வீடுகளுக்கும் சென்று வேண்டி வழிபட வழிகாட்டுகிறார்.

"மதியால் வித்தகனாகி மனதால் உத்தமனாகி

பதிவாகி சிவஞான பரயோகத் தருள்வாயே"

என்று அருணகிரியார் கரூர் திருப்புகழில் முருகப்பெருமானிடம் வேண்டுகிறார், இங்ஙனம் பர உலகத்து இன்பத்தை நல்கும் முருகனிடம் இம்மை மறுமைக்குத் தேவையான அனைத்தும் கிடைப்பதை நக்கீரர் திருக்கோயில் (அர்ச்சா மூர்த்தியை வழிபடுதல்) வழிபாடு, எம்பெருமானின் புகழைப் போற்றிப் பாடுதல் முறையில் அமைந்த தோத்திர வழிபாடு, முருகனை அளந்து காண இயலாத நிலையில் தத்துவப் பொருளாகக் காணுதல், அடிபணிதல் எனும் திருவடி வழிபாட்டால் அடைக்கலத்தை மேற்கொள்ளல் போன்ற தன்மைகளில் அடியார்கள் வழிபட்டு உய்யும் வகையில் எடுத்துரைத்துள்ளார்.

"திருமுருகாற்றுப்படையைப் புலவராற்றுப்படை எனக் கருதலாம். ஆனால் பரிசில் பெற்றவன் விளிப்பானா யில்லை. பரிசில் பெறாதவனை நோக்கிய விளியாகவும் இஃது அமையவில்லை. மரபுகளுக்கு எதிராகப் பரிசில் வழங்கும் வள்ளலை விளிப்பதாக வருதல் ஏற்புடைத்தாயில்லை" 1 என்று எடுத்துரைத்து திருமுருகாற்றுப்படை என்ற பெயரின் விளக்கத்தை மறுத்துரைப்பது சிந்திக்கத் தக்கதாகவே உள்ளது.

"'முருகன்' என்பது தமிழ்நாட்டில் வழங்குகிற வெகு சிறப்பான பெயர். 'முருகன்' என்றாலும் 'அழகானவன்' என்றும் 'இளமை நலம் மாறாத சௌந்தர்யம் வாய்ந்தவன்' என்பதே அர்த்தம்" 2 என்பது நமது பக்தியாலும், வழிபாட்டாலும் ஒருவர் பெறுகின்ற வீடுபேறு அவருக்கு என்றும் இளமையை அதாவது என்றும் ஒரே நிலையில் இருக்கும் தன்மையை நல்கும் என்று கருத இடம் உள்ளது. இந்த அடிப்படையில் காணுகின்ற போது முருகன் நிலையை அடைபவர்களுக்காகவ இந்நூல் யாக்கப்பட்டுள்ளதால் திருமுருகாற்றுப்படை என்ற பெயர் அமைந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

## முருகனின் அர்ச்சாவதாரத் தோற்றம்

சிவபெருமானின் திருவருளால் நெற்றிக் கண்ணில் உதித்த சிவபெருமான் ஞானத்தைத் தமது சீடர்களாகிய சித்தர்களுக்குக் கற்பித்ததால் அவரே முதல் சித்தர் ஆகிறார் என்பர். முதல் சித்தராகிய

முருகப்பெருமான் ஆறுபடை வீடுகளில் இயற்கை எழில் சூழ்ந்த இடங்களில் ஆறு விதமான திருக்கோலத்துடனும் ஆறு விதமான திருமுகத் தன்மைகளுடன் திருக்காட்சி நல்குகிறார்.

வைணவ சமயத்தில் பெருமாளைத் திருக்கோயில்களில் கண்டு வழிபடும் முறையை அச்சாவதாரம் என்பர். எல்லா மக்களும் எக்காலத்தும் கண்களால் கண்டு மகிழ்ந்து வணங்கித் தாம் கண்ட இறைத் தோற்றத்தினைத் தம் மனதில் நிறுத்திப் போற்றி வழிபடும்படியாக உள்ள வழிபாடு அச்சாவதார வழிபாடு ஆகும். திவ்ய தேசங்களில் திருமால் நின்றும், இருந்தும், கிடந்தும் வழங்கும் திருக்காட்சிகள் அச்சாவதாரமாகும். இந்த அச்சாவதார வழிபாட்டு முறையை முருகப்பெருமான் ஆறு திருத்தலங்களிலும் வீற்றிருந்து அருள்புரியும் நிலையில் காண முடிகிறது.

## முருகனும் ஆறுமுகமும்

திருப்பரங்குன்றத்தில் முருகனுடைய தோற்றத்தை சூரியனோடு ஒப்பிட்டுப் புறத்தில் நிறைந்த ஒளிக்கதிரின் திறம் போன்று அவரை வணங்குபவர் உள்ளத்திலும் அகத்தில் ஒளிரும் தன்மை உடையவராகத் திகழ்கிறார். தன்னைச் சேர்ந்தவர்களின் தீவினைகளைப் போக்கி அவர்களைத் தாங்குகின்ற திருவடி உடையவராக உள்ளார் என்று குறிப்பிடுகிறார். இத்தகைய முருகனிடம் "சேவடி படரும் செம்மல் உள்ளமொடு நலம்புரிக் கொள்கை புலம்புரிந் றையும் செலவினை நயந்தனை ஆயின் பலவுடன் நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப" (அடிகள் 61-64) எனும் அடிகள் இதை உறுதி செய்கின்றன. முருகனே அனைத்தும் என்று எண்ணிப் பணிந்தால் அவரது கருணை நமக்குக் கிடைக்கும் என்கின்றார்.

திருச்சீரலைவாய் எனும் திருச்செந்தூர் திருத்தலம் இரண்டாவதாக அமைந்துள்ளது. இத்தலத்தில் முருகன் ஆறுமுகத்தையும் பன்னிரு கரங்களையும் உடையவராக இருந்து அருள் பாலிக்கிறார். முதல் முகம் - மா இருள் எனப்படும் அகத்தில் உள்ள இருளை அகற்றுகிறது.

இரண்டாவது முகம் - முருகனை அகம் குளிர்ந்து வாழ்த்தும் அடியவர்களுக்கு அவர்கள் வேண்டியதை விரும்பியதைக் கேட்காத இடத்தில் தானே மனமுவந்து வழங்கும் தன்மை உடையதாக உள்ளது.

மூன்றாவது முகம் - வேதமயமாகவும் நாதமயமாகவும் இருப்பது இறை சக்தி. அந்த சக்தி அருள் நிரம்பிய உள்ளத்தால் ஓதப்படும் போது அதை முன்னின்று கேட்டு மகிழ்ந்து அதற்குப் பாதுகாப்பு அளித்து ஓதியவர்களுக்குப் பயனையும் வழங்குகிறது.

நான்காவது முகம் - மீண்டும் மீண்டும் பிறவியில் அழுந்தாத தன்மையில் தம்மை வழிபடும் ஆன்மாக்களைக் காத்தருளி விடுதலை அளிக்கிறது.

ஐந்தாவது முகம் - தீமை செய்பவரை ஒறுத்து நன்மை செய்பவரைக் காத்து அவர்களுக்கு அருளும் பாங்கை மேற்கொள்கிறது. அசுரத் தன்மை உடையோரைக் கண்டித்தோ அல்லது அழித்தோ மறக்கள வேள்வி நிகழ்த்துதல் நிகழ்கிறது. பெருமான் வேண்டுதல், வேண்டாமை இல்லாதவர். அதனால் அவரவர் வினைகளுக்கு ஏற்ப அவரவர்களுக்கான பலன்களை வழங்குவது இறைத்தன்மையாகும். பெருமானைப் போற்றுதலையும், திருவடி தொழுதலையும் மேற்கொள்ளும் ஒவ்வொரு ஆன்மாவும் நன்னெறியில் செல்ல முடிகிறது. அதனால் தான் அனைத்துச் சமயங்களிலும் போற்றுதலும், பணிதலும் நெறியாகக் கொள்ளப்பட்டுள்ளன. திருக்கோவிலுக்குச் சென்று பரிகாரங்கள் செய்வதால் செய்த வினைகள் முழுவதுமாகத் தீர்வதில்லை. மாறாக நிலத்தின் மேற்பரப்பில் உள்ள வேண்டாத செடி, கொடிகள் வெட்டப்பட்டாலும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டாலும் அவை மழைத்துளியாய் மீண்டும் உயிர் பெற்று வளர்வது போல மீண்டும் தவறுகள் செய்யத் தூண்டுகின்றன அல்லது காரணமாகின்றன என்பது மனிதனுக்குள் புகுந்திருக்கின்ற தீய வாசனைகள் அவ்வப்போது துளிர்விட்டு வளரத் தொடங்குகிறது என்பதைக் காட்டுகிறது. ஆனால் தொடர்ந்து இறைவனின் நாமத்தைக் கூறிக்கொண்டே இருக்கும்போது நமக்குள் ஏற்படும் மாற்றம் தவறு செய்யத் தூண்டுவது இல்லை. மாற்றம் மனதளவிலும் செயல் அளவிலும் மேலான நிலையைத் தருகிறது.

"பாவங்களை வேரோடு களைய வேண்டுமானால் இறைவனை நமக்குள் நிலைபெறச் செய்ய வேண்டும். எப்படிப்பட்ட சமஸ்காரங்களையும் குண்டோடு அழிக்கும் சக்தி இறை நாமத்திற்கு உண்டு இது பரமசத்தியம்"3 என்று பரீக்ஷித் மகாராஜாவிடம் சுகப்பிரம்மம் ஸ்ரீ பாகவதத்தில் எடுத்துரைக்கிறார். ஆதலால் நாமத்தைக் கூறுதல் என்பது நெருப்புப் போன்றது. அது நமது தீவினைகளுக்கான அடிச் சுவடுகளை இல்லாமல் அழித்து விடும் வல்லமை உடையது.

ஆறாவது முகம் - வள்ளியோடு இணைந்து மகிழ்ந்தது. வள்ளி விரும்பி முருகனை மணக்கக் காத்திருந்ததால் விரும்பி இறையை அடைய முயலும் (இச்சா சக்தி) ஆன்மாக்களுக்கு அவர்கள் வாழ்வில் அனைத்தையும் தந்து அருள்கிறது. இங்கனம் ஆறு திருமுகங்களும் வழிபடும் அடியவர்களுக்காகவே திருத்தோற்றம் கொண்டு அவர்களைக் கடைத்தேற்ற அருள் புரிந்து நிற்கிறது என்று ஆறு திருமுகங்களின் செயல்களைக் குறிப்பிட்ட நக்கீரர் முருகனின் திருகரங்களின் செயல்பாட்டையும் விரித்துரைத்துள்ளார்.

திரு ஆவினன்குடி (பழனி) திருத்தலத்தில் முனிவர்கள், தேவர்கள், உருத்திரர்கள் முதலிய வானுலகத்தவர்களின் சிறப்புகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இவர்களும் சிவன், திருமாலும் இணைந்து பிரணவத்திற்கு உரிய பொருளைக் கூறாததால் சிறைப்பட்ட பிரம்மனை விடுவிக்க வந்து வேண்டி நின்று வணங்குகின்றனர். மேலோர்களுக்கெல்லாம் மேலோராக ஞானத்தின் வடிவாக முருகன் மிளிர்வதால் இங்கே அனைவரும் ஒன்று கூடித் தொழுகின்றனர்.

திருவேரகம் (சுவாமிமலை) திருத்தலத்தில் மக்கள் கூப்பிய கையினராகவும், இரு பிறப்பாளர்களாகிய அந்தணர்கள் தமது நெறியில் நின்றும் மந்திரங்கள் ஓதி வழிபடுபவர்களாகவும் உள்ளனர்.

திருத்தணி திருத்தலத்தில் இயற்கை வர்ணனை, மகளிர் தோற்றம், குன்றக்குரவை ஆட்டம் இவர்களினுடே கச்சினன், தோளினன், சேவலங் கொடியினன் என்ற தன்மையில் முருகனைப் புகழ்ந்து போற்றி வழிபடுவோர் ஏத்தி நின்றனர்.

பழமுதிர்ச்சோலை (அழகர்கோவில்) திருத்தலத்தில் தெய்வ வழிபாடு உருவாகி நிலைத்த இடங்கள், அருவியின் சிறப்பு, குன்றில் வாழும் மக்கள் செந்நெல், வெண்பொரி, வெள்ளரிசி, ஆட்டுக்கிடாய் ரத்தம், மஞ்சள், வாசனைப் பொருட்களோடு பூக்கள் தூவி நறும் புகை காட்டி குறிஞ்சிப்பண்பாடி இசைக்கருவிகள் முழங்க தொலைவில் உள்ளோரெல்லாம் நடுங்கும்படியாகப் பெரிய ஒலியை எழுப்பி வழிபடுகின்றனர். வேண்டியவர்கள் வேண்டியதைப் பெற்றவர்கள் போல ஆங்காங்கே இருந்து வழிபட முருகனும் ஆங்காங்கே இருந்து அருளுதற்கு உரியவராகிறார் என்று நக்கீரர் ஆறு படை வீட்டின் வாயிலாக முருகன் அருள்வதையும் ஆறுமுகத்தானாக இருந்து அவர் தமது ஆறுமுகங்களின் வாயிலாக அருள்வதையும் எடுத்துரைத்துள்ளார். இந்த ஆறு திருமுகங்களின் செயல்பாடுகளை அருணகிரிநாதரும் திருப்புகழில் "ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்ற". என்ற திருப்பாடலில் உகந்து கூறியுள்ளார்.

## அடைக்கல நெறி

"நின்னளந்து அறிதல் மன்னுயிருக்கு அருமையின் நின்னடி உள்ளி வந்தனன் நின்னொடு புரையுநர் இல்லாப் புலமையோ னென" (அடிகள் 278 - 280) என்று நக்கீரர் முருகனைப் புகழ்ந்து அடிபணிந்து போற்றுகின்றார்.எண்ணுதற்கு எட்டார் எழிலார் கழலிறைஞ்சி (அடி 22) என்று மாணிக்கவாசகப் பெருமான் சிவபுராணத்தில் குறிப்பிடுவது போன்று புலன்களுக்கும், எண்ணமாகிய மனதிற்கும் எட்டாதவர் பெருமான். அவர் திருவடியை அடைந்து உய்வு பெற பல்வேறு தரப்பட்ட மக்களும் வேண்டி வழிபடும் முறையை எடுத்துரைத்து அருள் கூர்ந்துள்ளார்.

## முடிவுரை

முருகப்பெருமானின் அருள் பெற்ற அடியார் பக்குவம் அடைந்த அடியாரை முருகனிடத்தில் ஆற்றுப்படுத்துவது அவர் என்றென்றும் முருகனைப் போல் இளமையாகவே ஒரே நிலைத்த

தன்மையில் இருக்க ஆற்றுப்படுத்துவதால் இது திருமுருகாற்றுப்படை என்று பெயர் வந்திருக்கலாம் என்று சுட்டப்பட்டுள்ளது. அறுபடை வீடான ஆறு தலங்களிலும் முருகப் பெருமான் அர்ச்சாவதாரத் திருக்கோலத்தில் வீற்றிருந்து தம்மிடம் வேண்டும் அடியவர்களுக்கு வேண்டியாங்கு நிலையில் அருள் செய்கிறார். நான்காவது திருமுகத்தின் வாயிலாகத் தவறு செய்தவர்களைப் பெருமான் தண்டிக்கின்றார். போற்றுபவர்களின் வினைகளை அவர்களின் மாற்றங்களுக்கும் வளர்ச்சிக்கும் ஏற்ப அழித்து ஒழிக்கின்றார் மந்திரம் ஜெபிக்காத அதாவது இறைவனைப் போற்றுதல் செய்யாதவர்களின் வினைப் பலன்கள் அவர்கள் செய்யும் வழிபாட்டு முறையால் அழிவதுபோன்று தோன்றினாலும் அது அழிவதில்லை. அனைத்துத் தலங்களிலும் முருகனை வழிபடுபவர்கள் போற்றுதல் அல்லது திருவடியைத் தொழுதலையே வழிபாடாகக் கொண்டுள்ளனர். எங்கிருந்து வழிபட்டாலும் அவரவர்களுக்கு ஆங்காங்கே இருந்து அருளை நல்கும் தன்மை உடையவனாக முருகர் உள்ளார்.

## References

அறிவு நம்பி அ. (2010), திருமுருகாற்றுப்படை சங்க இலக்கியம் ஆகுமா? ஆய்வுக் கோவை, தொகுதி -1. ப- 158.

காஞ்சி ஸ்ரீ சந்திரசேகேந்திர சரஸ்வதி சுவாமிகள் (2024), தந்தையை மிஞ்சிய தனயன் முருகப்பெருமான் திருத்தலங்கள், தினமணி, தைப்பூசச் சிறப்பிதழ், ப - 100.

வேரோடு களைய வேண்டுமானால், ஸ்ரீ ராமகிருஷ்ண ஆனந்தம் (2024), தொகுதி 23, இதழ்-1, ப - 24.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License